# அரசியல் ஆதாயம் தேடும் அற்பச் செயலில் ஈடுபடுகிறது பா.ஜ.க.!

## இராமநாதபுரம் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இப்போது நான் முதலமைச்சராக பொறுப் பேற்றவுடன், கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவு படுத்தக்கூடிய வகையில் உத்தரவிட்டு, அந்தப் பணிகள் இப்போது விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பழைய திட்டத்தின் மூலம் 87 ஆயிரத்து 500 பேர் பயன் பெறுகிறார்கள். இப்போது விரிவுபடுத்தப்படுகின்ற காரணத் தால், 2 இலட்சத்து 95 ஆயிரம் பேர் பயனடையப் போகிறார்கள்.

**இனிமேல் யாரும் எப்போதும் தண்ணீர் இல்லாத காடென சொல்ல முடியாது!**

இங்கே வருவதற்கு முன்பு தான் அந்த துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக் கக்கூடிய அமைச்சர் நேரு அவர்களிடம் பேசி னேன். டிசம்பர் மாதத்தில் விரிவுபடுத்தக்கூடிய அந்தத் திட்டத்தை துவங்கிவிடலாம் என்று உறுதியுடன் சொன்னார். அப்படி தொடங்கும் போது, இராமநாதபுர மாவட்டத்தின் 3 இலட் சத்து 82 ஆயிரத்து 500 நபர்களுடைய வீடுக ளுக்கு தண்ணீர் வழங்கப் போகிறோம். இனிமேல், யாரும் எப்போதும், இராமநாதபு ரம் மாவட்டத்தை தண்ணீர் இல்லாத காடு என்று சொல்ல முடியாது.

அதுமட்டுமல்ல,

● இராமநாதபுரம் மாவட்டத்தின் வேளாண் வளர்ச்சிக்காக பார்த்திபனூரில் மதகு அணை கட்டப்பட்டது கழக ஆட்சியில்தான்.

● கண்மாய், ஊரணிகளை முழுமையாக தூர்வாரி – வரத்துக் கால்வாய் அமைத்து, அதன் மூலமாக, விவசாயிகள் இப்போது பய னடைகிறார்கள்.

● கடலாடி சட்டமன்ற உறுப்பினராக இருந்த அண்ணன் சுப.தங்கவேலன் அவர்கள், சட்டமன்றத்தில் அன்றைக்கு ஒரு கோரிக் கையை வைத்தார். இராமநாதபுரம் மாவட்டத் தில், கிராம சாலைகள்தான் இருக்கிறது; நெடுஞ்சாலைகள் இல்லை என்று சொன்னார். உடனே, முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் 500 கிலோ மீட்டர் கிராம சாலையை நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி, தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கின்ற வகை யில் மாபெரும் திட்டத்தை வகுத்துத் தந்து செயல்படுத்தினார்.

● இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்ததை ஏற்றுக் கொண்டு, தேவிபட்டினம் செல்லும் பகுதியில், 'அண்ணா அரசு பொறியியல் கல்லூரி'–யை முதலமைச்சர் கலைஞர் அமைத்தார்.

● மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தது மட்டுமல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்தியதால் இன்றளவும் பொதுமக்கள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

● சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை – எளிய மீனவர்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன், மண்டபம், தொண்டி, சாயல்குடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில், 5 ஆயிரம் சுனாமி குடியிருப்புகள் கழக ஆட்சியில் கட்டி தரப்பட்டது. இதனால், கான்கிரீட் வீடுகளில் மீனவர்கள் குடியேறினார்கள்.

● மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டது.

● இராமநாதபுரம் – கீழக்கரை இடையே, பாலைவனப் பூங்கா அமைக்கப்பட்டது.

இப்படி, சொல்லிக்கொண்டே போகலாம்!

அதுமட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலும், நிறைய திட்டங்கள் இராம நாதபுரம் மாவட்டத்துக்கு கடந்த நான்கரை ஆண்டுகளில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

● தனுஷ்கோடி மேம்பாடு

● அரியமான் கடற்கரையில், சாகச சுற்றுலா மையம் அமைக்க ஏற்பாடு

● இராமநாதசாமி கோயிலில், 17 திருப் பணிகள் மாஸ்டர் பிளான் பணிகள்

● நெடுஞ்சாலைத் துறை சார்பில், 219 பணிகள்

● 154 புதிய கட்டடங்கள்

● நகராட்சி நிர்வாகத்துறை சார்பில், 231 பணிகள்

● 22 மினி பேருந்துகள்

● திருவாடானை அணைக்கட்டு

● 90 கூட்டுறவு சங்கங்களுக்கு பால் தரப் பரிசோதனைக் கருவிகள் என்று மொத்த மாக 3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பி லான 46 ஆயிரத்து 770 வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றிருக்கிறது.

● 12 ஆயிரத்து 105 கோடி ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

**தி.மு.க. அரசின் மாநில அளவிலான முத்திரைத் திட்டங்கள்!**

இது மட்டுமல்ல, நம்முடைய அரசின் மாநில அளவிலான முத்திரைத் திட்டங்களில், இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை பேர் பயனடைகிறார்கள் என்று விபரத்தை சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

● 2 இலட்சத்து 36 ஆயிரம் சகோதரி களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை யாக மாதம் ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது.

● 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட உழவர் கள் பல்வேறு உதவித் தொகைகளை பெற்றி ருக்கிறார்கள்.

● 83 ஆயிரத்து 483 குழந்தைகளுக்கு தினந்தோறும் ஊட்டச்சத்து நிறைந்த காலை உணவு அன்புடன் பரிமாறப்படுகிறது.

● ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 543 மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி கள் தரப்பட்டிருக்கிறது.

● 55 ஆயிரம் மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றிருக்கி றார்கள்.

● 24 ஆயிரத்து 722 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியிருக்கிறோம்.

● 6 ஆயிரம் பேருக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

● பட்டியலின மக்களுக்காக நாம் செயல் படுத்தி வருகின்ற பல்வேறு சமூகநலத் திட் டங்கள் மூலமாக 78 ஆயிரம் ஆதி திராவிட மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் என்று நம்முடைய திராவிட மாடல் அரசின் மாணவர்களுக்கான திட்டங்களை சேர்த்தால் இந்த லிஸ்ட் நீண்டு கொண்டே செல்லும்! அதில் பயனடைந்த சில மாணவர் கள் தங்களுடைய சக்சஸ் ஸ்டோரியை சமீபத் தில் சென்னையில் நேரு விளையாட்டு அரங் கத்தில் நடத்திய 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சியில் அங்கு மாணவர்கள் விவரித்தார் களே, பேசினார்களே, நீங்கள் எல்லாம் கண்டிப்பாக செய்திகளிலும், சோஷியல் மீடியாவிலும் பாத்திருப்பீர்கள்.

– இப்படி ஒவ்வொருவருடைய தேவையை யும் கனவையும் நிறைவேற்றுகின்ற அரசாக கழக அரசு செயல்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாகதான் இன்றைக்கு இந்த விழா நடைபெறுகிறது!

மொத்தம், 738 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கான விழாவாக இந்த விழா! மிக முக்கியமாக,

● இராமநாதபுரம் பேருந்து நிலையம்,

● தங்கச்சி மடம் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடம்,

● கோவிலாங்குளத்தில் சமூகநீதி விடுதி,

● பரமக்குடியில் கல்லூரி மாணவர் களுக்கான சமூகநீதி விடுதி ஆகியவற்றை திறந்து வைத்திருக்கிறேன்.

**9 புதிய அறிவிப்புகள்!**

இவ்வளவு சொன்னாலும், இங்கே வந்து விட்டு புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் நான் போக முடியாது? நம்முடைய அமைச்சர், M.L.A., உள்ளிட்டோர் முன் வைத்திருக்கக் கூடிய கோரிக்கைகளின் அடிப்படையில், 9 புதிய அறிவிப்புகளை நான் இப்போது வெளியிடப் போகிறேன்.

**(அந்த 9 அறிவிப்புகளும் இதே பக்கத்தில் தனியாக பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது காணலாம்.)**

இராமநாதபுரம் மாவட்டத்துக்கு வந்து விட்டு, மீனவ நண்பர்கள் பற்றி பேசாமல் இருக்க முடியுமா! காரணம் அந்தளவுக்கு, மீனவர்கள் நிறைந்து வாழக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம்.

கடலோர மாநிலமான தமிழ்நாட்டில், ஆண்டுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் வர்த்த கம் நடைபெறுகின்ற தொழிலாக மீன் வளத் தொழில் இருக்கிறது. அதில், 25 விழுக்காடு இந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமே நடைபெறுகிறது.

**சொன்னதைச் செய்யும்; சொன்னதைத் தாண்டியும் நன்மை செய்யும் ஆட்சி இது!**

கடந்த, 2023–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், ராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில் கலந்து கொண்டு நான் பேசினேன். அப்போது சொன்னேன். மீனவர் கள் நலனுக்காக மொத்தம் 10 அறிவிப்பு களை வெளியிட்டு இருந்தேன். அந்த பத்து அறிவிப்புகளுமே நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் நான் இங்கே பதிவு செய்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், அறிவிப் பில் குறிப்பிட்டதை விடவும், அதிகமாகவே செயல்படுத்தி வருகிறோம் என்று பெருமை யுடன் நான் இங்கு பதிவு செய்கிறேன். எடுத் துக்காட்டாக, 45 ஆயிரம் பேருக்கு மீன் பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன் வழங்கப்ப டும் என்று அறிவித்திருந்தேன். ஆனால், இன்று வரை மொத்தம் 81 ஆயிரத்து 588 மீனவர்களுக்கு, 687 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. சொன்னதைச் செய்யும், சொன்னதைத் தாண்டியும் நன்மை செய்யும் ஆட்சி இது!

அதேபோல, கடுமையான உழைப்புக்கு புகழ்பெற்ற நம்முடைய இராமநாதபுரம் மீன வர்கள் கோரிக்கையை ஏற்று, நீங்கள் கேட்ட இடங்களில் எல்லாம்,

● மீன் இறங்கு தளங்கள்,

● கூடுதல் கட்டமைப்பு வசதிகள்,

● தூண்டில் வளைவு, போன்ற வசதி களை ஏற்படுத்தி தந்திருக்கிறோம்.

● மேலும், மீன்பிடி தடைக்கால நிவார ணத் தொகை 8 ஆயிரமாக உயர்வு!

● மானிய டீசல் அளவு உயர்வு

● வீட்டுமனைப் பட்டா என்று அனைத்துமே செய்து கொடுத்தி ருக்கிறோம்!

**ஒன்றிய பா.ஜ.க. அரசு மீனவர்களை காக்க ஒன்றுமே செய்யவில்லை!**

நாம் இவ்வளவு செய்து கொடுத்தாலும், நம்முடைய மீன வர்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை, இலங் கைக் கடற்படையால் ஏற்படுகின்ற தாக்குதல். இதை நாம் தொடர்ந்து அதில் ஈடுபட்டு கண்டிக்கிறோம், போராட்டம் நடத்துறோம்! ஆனால், ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு, நம்முடைய மீனவர்களைக் காக்க எதுவும் செய்யவில்லை.

கச்சத்தீவை மீட்பதுதான் சரி யான தீர்வாக அமையும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மா னத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். இதை வைத்து இலங்கை அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அர சாங்கம் ஒரு கோரிக்கை வைத்திருக்க வேண் டும். அதை செய்ய கூட பா.ஜ.க. அரசு மறுக் கின்றது. இலங்கை சென்ற இந்தியப் பிரதமரும் இதை வலியுறுத்த மறுக்கிறார். கச்சத்தீவை தர மாட்டோம் என்று இலங்கை யின் வெளியுறவு அமைச்சர் சொல்லுகிறார். இதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச் சர் ஏதாவது மறுப்பு பேசியிருக்க வேண்டுமா? வேண்டாமா?

தமிழ்நாட்டு மீனவர்கள் என்றால் மட்டும் அவர்களுக்கு இளக்காரமாகப் போய்விட்டது? நாம் இந்தியர்கள் இல்லையா? தமிழ்நாடு, தமிழர்கள் என்றாலே ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஏன் கசக்கிறது? தமிழ்நாடு மீது அவர்களுக்கு இருக்கின்ற வன்மத்தை எப்படி யெல்லாம் காட்டுகிறார்கள் என்று நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

● ஜி.எஸ்.டி.யால் நிதி உரிமை போய் விட்டது,

● நிதிப் பகிர்விலும் ஓரவஞ்சனை,

● சிறப்புத் திட்டம் எதையும் அறிவிக்க மாட்டார்கள்.

● பள்ளிக் கல்விக்கான நிதியை தரமாட் டார்கள்.

● பிரதமர் பெயரில் இருக்கின்ற ஒன்றிய அரசுத் திட்டங்களுக்கும் நாம் தான் படியளக்க வேண்டும்!

இதெல்லாம் போதாது என்று, நீட், தேசி யக் கல்விக் கொள்கை என்று கல்வி வளர்ச் சிக்கும் தடை!

● கீழடி அறிக்கைக்கு தடை!

● எல்லாவற்றிற்கும் மேல் தொகுதி மறுவரையறை!

இப்படி, தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்வ தையே ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்கமாக செய்து கொண்டிருக்கிறது.

**நிதி தராத நிதியமைச்சர் கரூருக்கு மட்டும் உடனே வந்தது ஏன்?**

தமிழ்நாட்டை மூன்று முறை மிகப்பெரிய பேரிடர் தாக்கி ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் உடனே வராத, நிதி தராத ஒன்றிய நிதி அமைச்சர் கரூருக்கு மட்டும் உடனே வருகிறார். மணிப்பூர் கலவ ரம், குஜராத் விபத்துகள், கும்பமேளா பலிக ளுக்கெல்லாம் உடனே விசாரணைக் குழுவை அனுப்பாத பா.ஜ.க., கரூருக்கு மட் டும் உடனே அனுப்புகிறார்கள் என்றால், தமிழ்நாட்டு மக்கள் மீது இருக்கின்ற அக்க றையால் கிடையாது.

இங்கேதான் நீங்கள் கவனிக்க வேண் டும் – அடுத்த ஆண்டு தேர்தல் வருகிறது! "இதில் ஏதாவது அரசியல் ஆதாயம் கிடைக் குமா? இதை வைத்து யாரையாவது மிரட்ட லாமா? உருட்டலாமா?" என்று பார்க்கிறார்கள். யாருடைய ரத்தத்தையாவது உறிஞ்சி உயிர் வாழத் துடிக்கின்ற ஒட்டுண்ணியாக தான் பா.ஜ.க. இருக்கிறது. மாநில நலன்களைப் புறக்கணித்து, மாநில உரிமைகளைப் பறித்து, இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாநிலங்களே இருக்கக்கூடாது என்ற எண்ணத்தோடு செயல்படுகின்ற ஒன் றிய பா.ஜ.க.–வுடன் எதிர்க்கட்சியாக இருக் கக்கூடிய அ.தி.மு.க.–வும் கூட்டணி வைத்துக் கொண்டு அடிமை சாசனம் எழுதி கொடுத்த தலையாட்டி பொம்மையாக இருக்கிறார்கள்.

**தவறுகளிலிருந்து தப்பிக்க பா.ஜ.க. வாஷிங்மிஷின்!**

பா.ஜ.க.–வை அ.தி.மு.க. ஆதரிப்பதற்கு ஏதாவது கொள்கை அடிப்படை இருக்கிறதா? பொது காரணம் இருக்கிறதா? மக்கள் நலன் அடிப்படை ஏதாவது இருக்கிறதா? குறைந்த பட்ச செயல் திட்டம் ஏதாவது இருக்கிறதா? எந்த கோரிக்கையாவது முன் வைத்து கூட் டணி சேர்ந்திருக்கிறார்களா? எதுவும் கிடை யாது. தவறு செய்தவர்கள் அத்தனை பேரும் அடைக்கலமாகி தங்களுடைய தவறுகளிலி ருந்து தப்பிப்பதற்காக வாஷிங் மிஷின் தான் பா.ஜ.க. அந்த வாஷிங் மிஷினில் உத்தமரா கிவிடலாம் என்று குதித்திருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி அவர்களை எப்படி பயன்படுத்தி ருக்கிறார்கள் என்றால், கூட்டத்திற்கு கூட்டம் – மேடைக்கு மேடை – தெருவுக்கு தெரு சென்று நம்முடைய கூட்டணிக்கு யாராவது வருவார்களா? என்று ஆள் சேர்ப்பதற்கான அசைன்மெண்ட்டை வழங்கி இருக்கிறார்கள்.

அவரோ, மைக் கிடைத்தால் போதும் என்று தங்களுக்கு பிடிக்காதவர்களை எல்லாம் விருப்பம் போல திட்டிக் கொண்டிருக் கிறார். தமிழ்நாட்டின் நலன்களையும், தமிழ் நாட்டு மக்களின் மேலேயும் உண்மையாக அக்கறை கொண்ட யாரும் பா.ஜ.க.–வுடன் கூட்டணிக்குப் போகமாட்டார்கள். ஏனென் றால், நாட்டு மக்களை துண்டாடும் ஆர்.எஸ். எஸ். இயக்கத்தின் கொள்கைகளை முழுவீச்சில் செயல்படுத்திருக்கக்கூடிய அரசி யல் முகம், அதிகார பலம் தான் பா.ஜ.க. அதி லும், மூன்றாவது முறை மக்களின் ஆதரவு குறைந்து ஒரு சிலரின் ஆதரவோடு ஆட்சி அமைத்த பிறகு, ஆர்.எஸ்.எஸ். பாதையில் வேகமாக நடைபோட ஆரம்பித்திருக்கிறது பா.ஜ.க.

**நம்முடைய பணி திராவிடமாடல் 2.0-விலும் தொடரும்!**

பெருந்தலைவர் காமராசர் அவர்களை கொல்ல முயற்சித்த ஆர்.எஸ்.எஸ். அமைப் போடு நூற்றாண்டில் அவர்களுடைய செயல் திட்டத்தை வேகப்படுத்தியிருக்கிறார்கள். வர லாறு முழுவதும் இவர்களுடைய கொள்கை சதித் திட்டங்களுக்கு எதிராக நின்று தமிழ்நாட் டையும், தமிழ்நாட்டு மக்களை காக்கின்ற நம் முடைய பணி – அடுத்து அமையவிருக்கும் திராவிட மாடல் 2.0–விலும் தொடரும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட் டின் உரிமைக்காகவும் போராடி, மக்களின் தேவைகளை உணர்ந்து, உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், தாயுமா னவர், அன்புக்கரங்கள் என்று உங்களுக்கு வேண்டியதை செய்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் பணிகளை நாங்கள்தான் தொடர்ந்து, தொய்வில்லாமல் செய்வோம்!

**உங்கள் எதிர்பார்ப்புகளை எல்லாம் நிறைவேற்றுவேன்!**

என்னைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக வளர்த்தெடுக்கின்ற கடமையை இன்னும் இன்னும் சிறப்பாகச் செய்து காட்டுவேன்!

உங்கள் எதிர்பார்ப்புகளை எல்லாம் நிறைவேற்றுவேன்!

திராவிட மாடல் ஆட்சிதான் அடுத்து வரக் கூடிய தேர்தலிலும் வென்று, தொடரும்! அப்போது, இன்னும் பல்வேறு திட்டங்களோடு உங்களை எல்லாம் சந்திப்பதற்கு வருவேன்! வருவேன்! வருவேன்! என்று உறுதி அளித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ராஜகண்ணப்பன் அவர்கள். பெயரில் ராஜா என்று இருந்தாலும் அவர் எப்போதுமே மக்கள் தொண்டர்! செயலில் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருப்பவர் கண்ணப்பன் அவர்கள்! இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி உழைத்திருக்கக்கூடிய, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா என்ற முத்துராமலிங்கம் – கழகத்தின் மூத்த முன்னோடி காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி அவர்களின் அருமை மகன்.

தென்மண்டலத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற செயல் வீரர்களில் முக்கியமானவர் என்னுடைய அன்புத்தம்பி முத்துராமலிங்கம் அவர்கள். அதேபோல், அருகில் இருக்கின்ற மாவட்டமாக இருந்தாலும், தன்னுடைய சொந்த மாவட்டத்துக்கு முக்கியத்துவம் தருவதுபோல, இராமநாதபுரத்தையும் கவனிக்கிறார் நம்முடைய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள்.

அவரும் இந்த விழாவுக்கு வந்திருக்கிறார். நம்முடைய மக்கள் பிரதி நிதிகளுக்கு துணையாக மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அவர்களுக்கும், மாவட்டத்தின் அரசு அலுவலர்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

---

## இராமநாதபுரம் மாவட்டத்தின் மேம்பாட்டிற்கு 9 முக்கிய அறிவிப்புகள்!

இவ்வளவு சொன்னாலும், இங்கே வந்துவிட்டு புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் நான் போக முடியாது? நம்முடைய அமைச்சர், M.L.A. உள்ளிட் டோர் முன் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளின் அடிப்படையில், 9 புதிய அறிவிப்புகளை நான் இப்போது வெளியிடப் போகிறேன்.

**முதலாவது அறிவிப்பு –**

இராமநாதபுரம் நகராட்சியில் தேசிய நெடுஞ் சாலைப் பகுதி நான்குவழித் தடத்திலிருந்து ஆறு வழித் தடமாக 30 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**இரண்டாவது அறிவிப்பு –**

திருவாடானை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் வட்டங்களில் இருக்கின்ற 16 முக்கிய கண்மாய்கள் 18 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**மூன்றாவது அறிவிப்பு –**

கீழக்கரை வட்டத்தில் இருக்கின்ற உத்திரகோச மங்கை, வித்தானூர் உள்ளிட்ட 6 கண்மாய்கள் 4 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் மறு சீரமைக்கப்படும்.

**நான்காவது அறிவிப்பு –**

கடலாடி வட்டத்திலுள்ள செல்வானூர் கண்மாய் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சிக்கல் கண்மாய்கள் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மறுசீரமைக்கப்படும்.

**ஐந்தாவது அறிவிப்பு –**

பரமக்குடி நகராட்சிக்கு 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப் படும்.

**ஆறாவது அறிவிப்பு –**

இராமநாதபுரம் நகராட்சியின் பழைய பேருந்து நிலையம் நவீன வணிக வளாகமாக மாற்றி அமைக்கப்படும்.

**ஏழாவது அறிவிப்பு –**

இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரியில் வசதிகளை மேம்படுத்தி, புதிய பாடப் பிரிவுகளை தொடங்கும் வகையில் 10 கோடி ரூபாய் செலவில் புதிய கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்படும்.

**எட்டாவது அறிவிப்பு –**

கீழக்கரை நகராட்சிக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட் டில், புதிய அலுவலகக் கட்டடமும், ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில், நவீன மீன் அங்காடியும் கட்டப் படும்.

**ஒன்பதாவது அறிவிப்பு –**

கமுதி பகுதி விவசாயிகளின் நலன்கருதி, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

இந்த 9 அறிவிப்புகளும் விரைவில் செயல்பாட் டிற்கு வரும்!

---

### இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்

## ரகுராம் ராஜனின் தந்தை மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.4–

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் ரகுராம் ராஜன் அவர்களின் தந்தை ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்களின் மறைவை யொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர், நமது பொருளாதார ஆலோச னைக் குழு உறுப்பினர் ரகுராம் ராஜன் அவர்களின் தந்தையும், இந்திய உளவுத் துறையில் சிறப்பாகப் பணி ஆற்றிய அதிகாரி யுமான ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தம டைந்தேன்.

தந்தையாரை இழந்து தவிக்கும் ரகுராம் ராஜன் அவர்களைத் தொடர்புகொண்டு அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் தேன்.

நம் நாட்டின் பாதுகாப்புக்காக, குறிப்பாக RAW அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட காலத் தில் இருந்து அதில் பணியாற்றிய சிறப்புக்குரிய ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்களின் பணி நன்றியுடன் நினைவு கூரப்படும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கழக இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக

## மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக். 4 –

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழக இளைஞரணியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் உள்ளிட்ட பணிகள் குறித்த கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 5ஆம் தேதி உத்தங்குடியில் நடை பெற உள்ளதாக வும் இதில் கழகத் தினர் திரளாக பங்கேற்குமாறு மாவட்ட செயலாளர் வணிகவரி மற் றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார். அதன் விபரம்



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக் கிணங்க கழக இளைஞரணி செய லாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை யின் படி கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்த வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோ சனைக் கூட்டம் வருகிற 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜெ.எப்.ஏ லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் எம் ஆர் எம் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மதுரை கிழக்கு, மேலூர், சோழவந்தான், மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி களின் தொகுதி பொறுப்பாளர்கள், வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகி கள், கழக முன்னோடி கள், கழகத் தினர் என பெரும் அனைவரும் ஆலோசனை கூட்டத்தில் பங் கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் வணிக வரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண் டுகோள் விடுத் துள்ளார்